

# SIVAPURANAM MISSION

www.Sivapuranam.in

திருச்சிற்றம்பலம்

# 12. திருச்சாழல்

(தில்லையில் அருளியது)

சிவனுடைய காருணியம்

(தரவு கொச்சகக்கலிப்பா)



# திருச்சிற்றம்பலம்



பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கு அரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலுங் காணேடீ
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவும் கொண்டுஎன்னை
ஈசன்அவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ

1





என்அப்பன் எம்பிரான் எல்லார்க்கும் தான்ஈசன்
துன்னம்பெய் கோவணமாக் கொள்ளும்அது என்னேடீ
மன்னுகலை துன்னுபொருள் மறை நான்கே வான்சரடாத்
தன்னையே கோவணமாச் சாத்தினன்காண் சாழலோ





கோயில் சுடுகாடு கொல்புலித்தோல் நல்ஆடை
தாயும்இலி தந்தைஇலி தான்தனியன் காணேடீ
தாயும்இலி தந்தைஇலி தான்தனியன் ஆயிடினும்
காயில் உலகனைத்துங் கல்பொடிகாண் சாழலோ





அயனை அனங்கனை அந்தகனைச் சந்திரனை
வயனங்கள் மாயா வடுச்செய்தான் காணேடீ
நயனங்கள் மூன்றுடைய நாயகனே தண்டித்தால்
சயம்அன்றோ வானவர்க்குத் தாழ்குழலாய் சாழலோ





தக்கனையும் எச்சனையும் தலை,அறுத்துத் தேவர்கணம்
தொக்கன வந்து, அவர்தம்மைத் தொலைத்ததுதான் என்னினாக
தொக்கன வந்து.அவர்தம்மைத் தொலைத்தருளி
அருள் கொடுத்தங்கு
எச்சனுக்கு மிகைத்தலை மற்று.அருளினன்காண் சாழிலோ





அலரவனும் மாலவனும் அறியாமே அழல்உருவாய்
நிலமுதற்கீழ் அண்டம்உற நின்றதுதான் என்னேடீ
நிலமுதற்கீழ் அண்டம்உற நின்றிலனேல் இருவரும்தம்
சலமுகத்தால் ஆங்காரம் தவிரார்காண் சாழலோ





மலைமகளை ஒருபாகம் வைத்தலுமே மற்றொருத்தி
சலமுகத்தால் அவன்சடையில் பாயும்அது என்னேடீ
சலமுகத்தால் அவன்சடையில் பாய்ந்திலளேல்தரணிஎல்லாம்
பிலமுகத்தே புகப்பாய்ந்து பெருங்கேடாம் சாழலோ





கோலாலம் ஆகிக் குரைகடல்வாய் அன்றெழுந்த
ஆலாலம் உண்டான் அவன்சதுர்தான் என்னேடீ
ஆலாலம் உண்டிலனேல் அன்று அயன்மால் உள்ளிட்ட
மேலாய தேவர்எல்லாம் வீடுவர்காண் சாழலோ





தென்பால் உகந்துஆடும் தில்லைச் சிற்றம்பலவன்
பெண்பால் உகந்தான் பெரும்பித்தன் காணேடீ
பெண்பால் உகந்திலனேல் பேதாய் இருநிலத்தோர்
விண்பால் யோகுஎய்தி வீடுவர்காண் சாழலோ.





தான்அந்தம் இல்லான் தனைஅடைந்த நாயேனை
ஆனந்த வெள்ளத்து அழுத்துவித்தான் காணேடீ
ஆனந்த வெள்ளத்து அழுத்துவித்த திருவடிகள்
வான்உந்து தேவர்கட்குஓர் வான்பொருள்காண் சாழலோ





நங்காய்இது என்னதவம் நரம்போடு எலும்பும் அணிந்து
கங்காளம் தோள்மேலே காதலித்தான் காணேடீ
கங்காளம் ஆமாகேள் காலாந்தரத்து இருவர்
தங்காலம் செய்யத் தரித்தனன்காண் சாழலோ





கான்ஆர் புலித்தோல் உடைதலைஊண் காடுபதி
ஆனால் அவனுக்குஇங்கு ஆட்படுவார் ஆரேடி
ஆனாலும் கேளாய் அயனும் திருமாலும்
வான்நாடர் கோவும் வழிஅடியார் சாழலோ.





மலைஅரையன் பொற்பாவை வாள்நுதலாள் பெண்திருவை
உலகறியத் தீவேட்டான் என்னும்அது என்னேடீ
உலகறியத் தீவேளாது ஒழிந்தனனேல் உலகுஅனைத்துங்
கலைநவின்ற பொருள்கள்எல்லாங் கலங்கிடுங்காண்
சாழலோ





தேன்புக்க தண்பணைசூழ் தில்லைச் சிற்றம்பலவன்
தான்புக்கு நட்டம் பயிலும்அது என்னேடீ
தான்புக்கு நட்டம் பயின்றிலனேல் தரணிஎல்லாம்
ஊன்புக்க வேற்காளிக்கு ஊட்டுஆம்காண் சாழலோ





கடகரியும் பரிமாவும் தேரும் உகந்து ஏறாதே
இடபம்உகந்து ஏறியவாறு எனக்குஅறிய இயம்பேடீ
தடமதில்கள் அவைமூன்றும் தழல்எரித்த அந்நாளில்
இடபமதாய்த் தாங்கினான் திருமால்காண் சாழலோ





நன்றாக நால்வர்க்கும் நான்மறையின் உட்பொருளை

அன்றுஆலின் கீழிருந்தங்கு அறமுரைத்தான் காணேடீ

அன்றாலின் கீழ்இருந்தங்கு அறம்உறைத்தான் ஆயிடினும்

கொன்றான்காண் புரம் மூன்றும் கூட்டோடே சாழலோ





அம்பலத்தே கூத்தாடி அமுதுசெயப் பலிதிரியும்
நம்பனையும் தேவன்என்று நண்ணும் அது என்னேடீ
நம்பனையும் ஆமாகேள் நான்மறைகள் தாமறியா
எம்பெருமான் ஈசாஎன்று ஏத்தினகாண் சாழலோ





சலம்உடைய சலந்தரன்தன் உடல்தடிந்த நல்ஆழி
நலம்உடைய நாரணற்கன்று அருளியவா றென்னேடீ
நலம்உடைய நாரணன்தன் நயனம் இடந்துஅரனடிக்கீழ்
அலர்ஆக இடஆழி அருளினன்காண் சாழலோ





அம்பரமாம் புள்ளித்தோல் ஆலாலம் ஆரமுதம்
எம்பெருமான் உண்டசதுர் எனக்கு அறிய இயம்பேடீ
எம்பெருமான் ஏதுஉடுத்து அங்குஏது அமுது செய்திடினும்
தம்பெருமை தான் அறியாத் தன்மையன்காண் சாழலோ





அருந்தவருக்கு ஆலின்கீழ் அறம்முதலா நான்கினையும்
இருந்தவருக்கு அருளும்அது எனக்கு அறிய இயம்பேடீ
அருந்தவருக்கு அறம்முதல்நான்கு அன்றுஅருளிச்
செய்திலனேல்
திருந்தவருக்கு உலகியற்கை தெரியாகாண் சாழலோ



ஸ்ரீ மாணிக்கவாசகர்